# தேயிலைத் தோட்டதொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார பிரச்சினைகள் ஹயிற்றி கிராம சேவையாளர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**பொன்னையா முருகன்**

*ponniahmurugan77@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** தேயிலைத் தோட்டதொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதாரபிரச்சினைகள் என்ற ஆய்வானது கண்டிமாவட்டத்தில் அம்பகமுவபிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட ஹயிற்றி கிராமசேவகர் பிரிவினைஅடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எத்தகைய சமூக, பொருளாதார பிரச்சினைகளினை எதிர்கொள்ளுகின்றார்கள், எதிர்கொள்ளும் பிரச்சினைகளினை குறைத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன தொடர்பில் தெளிவானமுறையில் ஆராய்கின்றது. தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார பிரச்சினைகளில் குடியிருப்புசார் பிரச்சினைகள் பிரதானமானவையாக காணப்படுகின்றன. குடியிருப்புகள் தொடர்ச்சியான முறையில் அமைந்திருப்பதனால் சுகாதார ரீதியான பிரச்சினைகள், மலசலகூடம் தொடர்பிலான பிரச்சினைகள் போன்றன ஏற்படுகின்றன. வடிகாலமைப்பு, குடிநீர், கழிவகற்றல் என்பன அனைத்து குடியிருப்புகளுக்கும் பொதுமைப்பாடானஅடிப்படையிலேயே காணப்படுவதனால், சுகாதார மற்றும் சமூகமுரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்பாகஅமைகின்றது. தொழிலாளர்களினுடைய பிள்ளைகள் கல்வியினை கற்பதற்கான வாய்ப்புகளும் இப்பிரதேசத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. ஆரம்ப கல்வியினை அல்லது இடைநிலைக்கல்வியினை மாத்திரம் கற்று பாடசாலையில் இருந்து இடைவிலகும் தன்மையானது இப்பகுதிகளில் அதிகமாகும். பொருளாதார அடிப்படையில் குறைவான வருமானம், சுயதொழில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படல், சொந்தமாக நிலமின்மை, அரசாங்கத்தின் மூலமாக முறையான உதவிகள் கிடைக்காமை. தொடர்ந்தும் கூலித்தொழில்களிலேயே தங்கியிருக்கவேண்டிய நிலைமை காணப்படல், லீசிங் அடிப்படையில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சுரண்டல்கள் போனற பிரச்சினைகளினை எதிர்கொள்ளுகின்றனர். ஆய்வானது ஆய்வுசார் பிரச்சினைகளினை விளக்கும் விபரணரீதியிலான ஆய்வாக அமைந்துள்ளது. அளவுசார், பண்புசார் தரவுகளினை உள்ளடக்கிய களப்புமுறையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. நேரடி அவதானம், விடயஆய்வு, நேர்காணல், வினாக்கொத்து மூலமாக முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளானவை கிராமசேவரின் அறிக்கை, பெருந்தோட்ட கம்பனியின் அறிக்கை என்பனவற்றின் மூலமாக பெறப்பட்டுள்ளன. ஆய்வுக்கான மாதிரி எடுப்பானது பிரதேச அடிப்படையிலான எளிய எளுமாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது பிரதேச அடிப்படையில் கணக்கிடப்பட்டு எளியஎளுமாற்று மாதிரி எடுப்பின் அடிப்படையில் 200 தொழிலாளர்கள் மாதிரிகளாக தெரிவுச்செய்யப்பட்டுதரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. 150 வினாக்கொத்துகள், 25 விடயஆய்வுகள், 20 நேர்காணல்கள், 05 பிரதானதகவல் வழங்குனருடனான நேர்காணல்கள் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கான நாட்சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டியது அவசியமாகும். மேலும் லயன் அடிப்படையிலான குடியிருப்பு முறைமை நீக்கப்பட்டு தனித்தனியாக அமைக்கப்பட்ட குடியிருப்பு திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் இவை மக்களுக்கு சொந்தமானதாக அமைக்கப்படல் வேண்டும், சட்ட அடிப்படையில் காணப்படுகின்ற வரையறைகள் நீக்கப்பட்டுபெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சலுகைகள் வழங்கப்படுவது அவசியமாகும். கல்வி, சுகாதாரம், உடகட்டமைப்புசார் வசதிகள் முறையாக முன்னெடுக்கப்படும் போது தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகபொருளாதாரப் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளமுடியும்.

**திறவுச்சொற்கள் –** பெருந்தோட்டம் தேயிலைச்செய்கை, தொழிலாளர்கள்

## I. ஆய்வு அறிமுகம்

உலகளாவியரீதியில் இன்று அதிகமாக பேசப்படுகின்ற பிரச்சினைகளில் பெருந்தோட்ட மக்கள் தொடர்பிலான பிரச்சினைகள் முதன்மையானவையாக காணப்படுகின்றன.பெருந்தோட்டம் என்ற வகையில் தேயிலை, தென்னை, இறப்பர், கோப்பி போன்ற பயிர்செய்கைகள் பயிர்செய்யப்படுகின்ற பிரதேசங்கள் பெருந்தோட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் தேயிலை பயிர்செய்கை உலகளாவியரீதியில் முதன்மையான பயிர்செய்கையாக காணப்படுகின்றது. கென்யா, சீனா, துருக்கி, இந்தோனேசியா, வியட்னாம், உகண்டா, மலேசியா, தன்சான்யா, மாலாவி, இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் தேயிலை உற்பத்தி பரவலான முறையில் இடம் பெறுகிறது. தேயிலை உற்பத்தியில் முதன்மையான நாடாகவும், சர்வதேச சந்தையில் முதன்மை பெறும் நாடாகவும் இலங்கை காணப்படுகின்றது. இலங்கைக்கு 60-66 வீதமான அந்நிய செலாவணியை பெற்றுத்தருவதாக தேயிலை காணப்படுகின்றது. இலங்கையில் கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துரை, மொனராகலை, அம்பாந்தோட்டை, குருநாகல், காலி, கம்பஹா போன்ற மாவட்டங்களில் தேயிலை பயிரிடப்படுகின்றது. காலணித்துவக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மக்களே பெருந்தோட்ட தொழிலாளர்களாக மலையக பிரதேசங்களில் வாழ்கின்றனர். 1820 காலப்பகுதியில் தற்காலிகமாக அழைத்துவரப்பட்ட மக்கள் 1860ஆம் ஆண்டாகும் போது நிரந்தரமாகவே வசிக்கலானார்கள்.

பெருந்தோட்ட மக்களில் 55.4 வீதமான மக்கள், நுவரெலியா மாவட்டத்திலேயே வாழ்கின்றனர். (Estimated Plantation Tamil community population based on Department of census Statistics, 2001) ஆரம்பகாலங்களில் பெருந்தோட்ட மக்கள் ஒரு தொழிலாளர் சமூகமாகவே கருதப்பட்டனர். ஆயினும் 20ம்

நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இச்சமூகத்தில் ஏற்பட்ட கல்வி மற்றும் அரசியல் ரீதியான மேலெழுச்சியின் விளைவாக இச்சமூகத்திலும் அதன் கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. மலையக மக்களிடையே ஐந்து வகையான சமூக வகுப்பினரை கண்டுக்கொள்ளமுடியும். இன்றும் பெருந்தோட்டங்களில் வாழ்பவர்கள்,கல்வி மேம்பாட்டின் ஊடாக தோட்டத்தொழில் கட்டமைப்பில் இருந்து விடுபட்டு அரசாங்கதொழில்,நகர மற்றும் கிராமத்துறை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள கீழ் மட்ட நடுத்தர சமூகம்,மலையக மாவட்டங்களிலும் கண்டி, கொழும்பு போன்ற நகரங்களிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வர்த்தக சமூகம்,1970களின் பின் வடகிழக்கு மாகாணங்களுக்கு இடம்பெயர்ந்து இன்று விவசாய சமூகமாக வாழ்பவர்கள்,நகரங்களில் நகர சுத்திகரிப்பாளர்களாகவும், கூலி தொழிலாளர்களாகவும் வாழும் சமூகம்.

1980களுக்கு பின்னர் கல்வி, அரசியல், தொழிற்துறையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக சமூக கட்டமைப்பிலும், மாற்றங்கள் ஏற்படலாகின. இதன்படி 57.4 வீதமானவர்கள் தோட்டத்துறையிலும் 24.4 வீதமானவர்கள் நகரப்புறங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். பெருந்தோட்டத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 730 ரூபா என்ற வகையில் சம்பளம் வழங்கப்படுகின்றது. (2016 கூட்டு ஒப்பந்தம்) எனவே குறைவான சம்பளம் இம்மக்களிடையே சமூக, பொருளாதார பிரச்சினைகள் ஏற்பட காரணமாக அமைகின்றது. இத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் லயன் அறைகளில், அரசாங்கத்திற்கு அல்லது தனியாருக்கு சொந்தமான நிலங்களிலேயே வாழ்கின்றனர். எனவே சொந்தமான நிலமின்மை ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது. மேலும் பெருந்தோட்ட துறை அல்லாமல் வேறு வருமானம் தரக்கூடிய தொழிலினை பெற்றுக்கொள்வதில் இருந்து புறக்கணிக்கப்படுவதால் பொருளாதார, சமூக மட்டங்களிலும் அம்மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அரச, மற்றும் தனியார் மட்டங்களில் தொழில் வாய்ப்புகளினை பெற்றுக்கொள்வதற்கு கல்வி மட்டமும் ஒரு தடையாக அமைவதை காணலாம். 2012ம் ஆண்டின் புள்ளிவிபரங்களின்படி நாட்டின் தேசியரீதியான எழுத்தறிவு வீதம் 92.5% ஆகும். இதில் ஆண் எழுத்தறிவு வீதம் 92.2% ஆகவும், பெண் 82.2% ஆகவும் காணப்படுகின்றது. ஆயினும் பெருந்தோட்ட சமூகத்தில் கல்வியறிவு வீதம் 81.3% ஆகவும், ஆண் 88.3% ஆகவும், பெண் 74.7% ஆகவும் காணப்படுகின்றது. மேலும் பெருந்தோட்ட துறையில் பாடசாலை செல்லாதோர் 19.9% மாகவும்,ஆரம்ப கல்வியை மட்டும் பெற்றவர்கள் 43.7% ஆகவும்,இரண்டாம் நிலை கல்வியை பெற்றவர்கள் 29.9% ஆகவும், உயர்கல்வியை பெறுவோர் 6.5% ஆகவும் காணப்படுகின்றனர். இது தேசிய ரீதியில் பாடசாலை செல்லாதோர் 7.7%வீதமாகவும், ஆரம்ப கல்வியை மட்டும் பெற்றவர்கள் 29% மாகவும், இரண்டாம் நிலை கல்வியை பெற்றவர்கள் 41.0% மாகவும், உயர்கல்வியை பெறுவோர் 21.2% ஆகவும் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

கல்வி, தொழில் அடிப்படையில் காணப்படும் மட்டுப்பாடுகளானவை சமூக, பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றன. தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகபொருளாதார பிரச்சினைகளில் குடியிருப்புசார் பிரச்சினைகள் பிரதானமானவையாக காணப்படுகின்றன. குடியிருப்புகள் தொடர்ச்சியான முறையில் அமைந்திருப்பதனால் சுகாதார ரீதியான பிரச்சினைகள், மலசலகூடம் தொடர்பிலான பிரச்சினைகள் போன்றன ஏற்படுகின்றன. மேலும் வடிகாலமைப்பு, குடிநீர், கழிவகற்றல் என்பன அனைத்து குடியிருப்புகளுக்கும் பொதுமைப்பாடான அடிப்படையிலேயே காணப்படுவதனால், சுகாதார மற்றும் சமூக முரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்பாக அமைகின்றது. பொருளாதார அடிப்படையில் குறைவான வருமானம், சுயதொழில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படல், விவசாயம், கால்நடை வளர்ப்பு ஏனைய சுயதொழில்களினை மேற்கொள்ளவும் தேவையான இடவசதி, பொருளாதார உதவிகள் என்பன குறைவாக காணப்படுகின்றன.

சொந்தமாக நிலமின்மை, அரசாங்கத்தின் மூலமாக முறையான உதவிகள் கிடைக்காமை. தொடர்ந்தும் கூலித்தொழில்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைமை காணப்படல், லீசிங் அடிப்படையிலான சுரண்டல்கள் போன்ற பிரச்சினைகளினை எதிர்கொள்ளுகின்றனர். மேற்கூறிய அடிப்படையில் தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார பிரச்சினைகளினை கண்டறிவதே ஆய்வினுடைய பிரதானமான நோக்கமாகும். இத்தகைய பிரச்சினைகளை குறைத்து கொள்வதற்கு அரசாங்கம், பெருந்தோட்டம், சமூக, தனியாள் மட்டங்களில் முறையான நடவடிக்கைகளினை முன்னெடுத்தல் அவசியமாகும்.

## II. ஆய்வு முறையியல்

### 1. ஆய்வு வடிவம்

தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற ஆய்வானது ஒரு விபரணரீதியான ஆய்வாகும். தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை தெளிவான முறையில் இனங்கண்டு அவற்றினை ஆராய்ந்து ஆய்வுசார் பிரச்சினைகளினை விபரிக்கும் ஆய்வாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

### 2. ஆய்வு பிரதேசம்

அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட ஹயிற்றி கிராம சேவகர் பிரிவில் காணப்படும் விக்டன் கீழ் பிரிவு, விக்டன் மேல் பிரிவு, டெம்பஸ்ட்டோ, ஹயிற்றி, இன்சரா, குருவத்தை, மகாவலி குடியிருப்புகள் ஆகிய கிராமங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3. தரவுசேகரிப்பு நுட்பம்

ஆய்வினை மேற்கொள்வதற்கான தகவல்களானவை முதலாம் நிலையினதாகவும் இரண்டாம் நிலையினதாகவும் அமைந்துள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் பிரதேச தொழிலாளர்கள், பெருந்தோட்ட அதிகாரிகளுடனான நேர்காணல்கள் மூலமாக பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளானவை கிராம சேவகரினுடைய அறிக்கைகள். பெருந்தோட்ட கம்பனியினுடைய அறிக்கைகள், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள விபரப்பட்டியல், குடித்தொகை மதிப்பீட்டு அறிக்கைஎன்பவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அளவுரீதியான மற்றும் பண்புரீதியான தரவுகளினை உள்ளடக்கிய கலப்புமுறையின் அடிப்படையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளானவை வினாக்கொத்து, விடய ஆய்வுகள், நேர்காணல்,நேரடி அவதானம், பங்குபற்றா அவதானம், பிரதான தகவல் தருணருடனான நேர்காணல் போன்ற தரவு சேகரிப்பு கருவிகளை பயன்படுத்தி பெறப்பட்டுள்ளன. மேலும் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை சேகரித்து அவற்றினை பகுப்பாய்வுரீதியில் ஆராய்வதாக தரவுசேகரிப்பு நுட்பம் அமைந்துள்ளது.

### 4. மாதிரி எடுப்பு

ஹயிற்றி கிராம சேவையாளர் பிரிவானது 3351 மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசமாக காணப்படுகின்றது. இவர்களில் 1101 பேர் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களாக காணப்படுகின்றனர். இவர்களில் பிரதேச அடிப்படையிலான எளிய எளுமாற்று மாதிரி எடுப்பின் அடிப்படையில் 200 பேர் தெரிவு செய்யப்பட்டு, ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மாதிரி எடுப்பின் அடிப்படையில் 150 வினாக்கொத்துக்கள் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வினாக்கொத்து அளவுரீதியான, பண்புரீதியான தகவல்களினை கொண்டமைந்துள்ளது. மேலும் பண்புரீதியான தகவல்களினை கண்டரிவதாக விடய ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நேரடி அவதானம், பங்குபற்றா அவதானம் மூலமாகவும் ஆய்வுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

### 5. தரவு சேகரிப்பு கருவிகள்

ஆய்விற்குறிய தரவு சேகரிப்புக்கருவிகளானவை அளவு, பண்பு ரீதியிலான அடிப்படைகளினை கொண்டமைந்துள்ளது. ஆய்வுக்குரிய முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு கருவிகளில் வினாக்கொத்து, விடய ஆய்வு, நேர்காணல் என்பன முதன்மைப்பெறுகின்றன. மேலும் பண்புசார் கருவியாக பங்குபற்றா அவதானமானது பிரதானமாக பயன்படுத்தப்பட்டது.

#### 5.1. வினாக்கொத்து

எளிய எளுமாற்று அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட தேயிலைத்தோட்ட தொழிலாளர்களிடம் இருந்து வினாக்கொத்து முறைமையின் கீழ் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்தானது பின்வரும் விடயங்களினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. 1.தொழிலாளர்களின் தனிப்பட்ட விபரம் 2.குடும்ப விபரம் 3.குடியிருப்பு தொடர்பான விபரம் 4.தொழில் மற்றும் வருமானம் தொடர்பான விபரம் 5.பிள்ளைகளின் கல்வி தொடர்பான விபரம் 6.தொழில் மற்றும் தொழில்சாரா உதவிகள் தொடர்பிலான விபரம் 7.தொழிலானர்களின் எதிர்பார்ப்புகள்தொடர்பான விபரங்களினை உள்ளடக்கியதாக வினாக்கொத்து அமைந்துள்ளது.

#### 5.2 விடய ஆய்வு

ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட 25 தேயிலைத் தோட்டதொழிலாளர்களிடம் விடய ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் தொழிலாளர்களிடம் தனிப்பட்ட, குடும்ப, வருமானம், குடியிருப்பு தொடர்பான விபரங்களானவை விடய ஆய்வின் மூலமாக கேட்டரியப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5.3 நேர்காணல்**

தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களிடம் இருந்து நேரகாணல்அடிப்படையிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தேயிலை தோட்டதொழில் தொடர்பிலான அறிமுகம், தேயிலைத் தோட்டத்தில் மேற்கொள்ளும் தொழில், வேலைத்தளத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், குடியிருப்புகளின் நிலை தொடர்பிலான நிலைகளினை கண்டரிவதாக நேர்காணல் அமைந்துள்ளது மேலும் பிரதான தகவல்தருணர்களாக ஹயிற்றி கிராம சேவையாளர், வட்டவளை பெருந்தோட்ட கம்பனியின் நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச வைத்திய அதிகாரி, தேயிலைத்தோட்ட மேற்பார்வையாளர் என்போரிடமும் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**IIII. தரவுப்பகுப்பாய்வு**

தரவுப்பகுப்பாய்வானது அளவுரீதியான மற்றும் பண்புரீதியான தரவுகளை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. அளவுரீதியான தரவுகள் தனித்துவமான முறையிலும்இ பண்புரீதியான தரவுகள் தனித்துவமான முறையிலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.ஆய்வின் பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு,பிரச்சினைகளுக்கான தீர்வுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**ஆய்வின்முடிவுகள்**

**அட்டவணை 1**

| கிராமம் | மொத்த சனத்தொகை | தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| விக்டன் கீ,பிரிவு | 448 | 106 |
| டெம்பஸ்ட்டோ | 1435 | 653 |
| குருவத்தை | 229 | 60 |
| இன்சரா | 462 | 98 |
| ஹயிற்றி | 215 | 62 |
| விக்டன் மே, பிரிவு | 438 | 102 |
| மகாவலி குடியிருப்பு | 124 | 20 |
| 3351 | 1101 | |

மூலம் - ஹயிற்றி கிராம சேவகர் அறிக்கை 2015


ஹயிற்றி கிராம சேவகர் பிரிவில் மொத்தமாக 3351 பேர் வசிக்கின்றனர். இவர்களுள் 51.7%ஆன பெண்களும், 48.3% ஆன ஆண்களும் காணப்படுகின்றனர். சனத்தொகை கூடிய கிராமமாக டெம்பஸ்டோ காணப்படுகின்றது. மொத்தமாக 1436 மக்கள் இப்பிரதேசத்தில் வசிக்கின்றனர். சனத்தொகை குறைவான பிரதேசமாக மகாவலி குடியிருப்பு காணப்படுகின்றது. இங்கு மொத்த சனத்தொகையானது 124 ஆகும். கிராமசேவகர் பிரிவில் உள்ள மொத்த சனத்தொகையில் ஊழியப்படையினரில் அதிகமானோர் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்கின்றனர்.பெறும்பாலானோர் தொழிலாளர்களாக காணப்படுவதனால் ஒப்பிட்டளவில் குறைந்தளவிலான வருமானத்தினையே பெறுகின்றனர்.

**1. குடியிருப்பின் தன்மை**

ஹயிற்றி கிராம சேவையாளர் பிரிவில் மொத்தமாக 595 குடியிருப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் 87.5%மான மக்கள் லயன் அறைகளிலும், 12.5% ஆன மக்கள் தனியான குடியிருப்புகளிலும் வாழ்கின்றனர். டெம்பஸ்டோ கிராமத்தில் அதிகமான குடியிருப்புகள் காணப்படுகின்றன. இங்கு 226 குடியிருப்புகள் உள்ளன. இப்பிரதேசத்தில் அதிகமான தொழிலாளர்கள் லயன் அறைகளிலேயே வசிக்கின்றனர். லயன் அறைகளானவை போதியளவிலானஅடிப்படை வசதிகளற்ற குடியிருப்புகளாக காணப்படுகின்றன.இவை பிரித்தானியரினுடைய ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட நீண்ட வரிசையில் அமைந்த தொடர்குடியிருப்புகளாகும். இங்கு 2-4 வரையிலான அறைகள்மாத்திரமே காணப்படுகின்றன. இவை குடும்ப உறுப்பினர்கள்அனைவருக்கும் போதுமான வகையில் காணப்படுவதில்லை.மாணவர்கள் கல்வி கற்பதற்கான வசதிகள், திருமண விழாக்கள், மரணச் சடங்குகள் போன்றவற்றை நடாத்துவதற்கான வசதிகளானவை இக்குடியிருப்புகளில் குறைவாகவே காணப்படுகின்றன.

**உரு. 1**


**குடியிருப்புகளின் தன்மை**




மூலம் :- ஹயிற்றி கிராம சேவையாளர் அறிக்கை 2015.

தொழிலாளர்களுக்கான குடிநீர் வசதிகள், மலசலகூடவசதிகள், கழிவகற்றல்சார்செயன்முறைகள், வடிகாலமைப்புசார் செயன்முறைகள் போன்றன தனித்தனியாக அன்றி தொழிலாளர்களுக்கு பொதுமைப்பாடான அடிப்படையில் அமைக்கப்பட்டே காணப்படுகின்றன. 3-5 குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடம்,5-10 வரையிலான குடும்பங்களினை உள்ளடக்கிய குடிநீர் திட்டம், லயன் அறைகளுக்கான பொதுவான வடிகாலமைப்புகள் என உட்கட்டமைப்புசார் வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது சுகாதார ரீதியில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக காணப்படுவதுடன், சமூக முரண்பாடுகள் ஏற்படவும், மாணவர்களின் கல்வி பாதிப்படையவும் காரணமாக அமைகின்றது. தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகளும் முறையான பொருத்தமான இடங்களில் அமைக்கப்படாமையினால் மண்சரிவு தொடர்பிலான பிரச்சினைகளுக்கும் தொழிலாளர்கள் உட்படுகின்றனர். 2015ம் ஆண்டுக்கான கிராம சேவகரின் அறிக்கையின்படி இப்பகுதியில் 99குடியிருப்புகள் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் இக்குடியிருப்புகளுக்கு சொந்தமான வீட்டு பத்திரம் இன்மையும் இங்கு குறிப்பிடதக்க விடயமாகும். “முதல்ல லயத்துலதான் இருந்தம் அப்றம் காணிக்கு வந்தாச்சி லயத்துல ரெண்டு ரூம்தான் காணிவீடு கொஞ்சம்வசதியா இருக்கு ஆனால் மண்சரிவு அதிகமா இருக்கு ஏற்கனவே ரெண்டு மூனு தடவ சரிஞ்சிருக்கு”(விடய ஆய்வு 11). எனவே குடியிருப்புசார் பிரச்சினைகள் லயன் அறைகள், தனியான குடியிருப்புகள் என இரண்டு பகுதிகளிலும் காணப்படுகின்றன.

**உரு 2**
**கல்விநிலை**




மூலம் :-கள ஆய்வு 2015

தொழிலாலர்களின் பிள்ளைகளினுடைய கல்வி வீதமானது மேற்குறிப்பிட்ட வரைபடம் மூலமாக காட்டப்பட்டுள்ளது. இடைநிலை கல்வி கற்பவர்களின் எண்ணிக்கையானது உயர்வான மட்டத்தில் காணப்படுகின்றது. ஏனெனில் தொழிலாளர்களினுடைய குடியிருப்புகளுக்கு அண்மித்தப்பகுதிகளில் ஆரம்ப, இடைநிலைக்கல்வியை வழங்கும் பாடசாலைகளான விக்டன், த,வி, டெம்பஸ்டோ, த,வி,கணேஷா,த,வி ஆகியனவே காணப்படுகின்றன. உயர்தரம் கற்க நகரப்பிரதேசங்களுக்கே செல்லவேண்டிய நிலைமை காணப்படுவதனால் போக்குவரத்துசார் மட்டுப்பாடுகள் பாடசாலை இடைவிலுக்கு காரணமாக அமைகின்றது. இலங்கையில் 10763 பாடசாலைகளில் 800 பாடசாலைகளே மலையகத்தில் காணப்படுகின்றன. அவற்றில் 600க்கு மேற்பட்டவை ஆரம்ப நிலை பாடசாலைகளாகும். நுவரெலியா பிரதேச சபையில் 155 பாடசாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் 73 பாடசாலைகள் ஆரம்பநிலை பாடசாலைகளாகவே உள்ளன. எனவே குடியிருப்புகளுக்கு அண்மையில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வியை தொடர்வதனையும், ஆரம்பக்கல்வியினை மாத்திரம் கற்று இடைநிலை கல்விக்காக நகர பாடசாலைக்கு சென்று பின்னர் பாடசாலை கல்வியை இடைநிறுத்தும் தன்மையை இப்பகுதிகளில் காணலாம். மேலும் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விசார் தேவைகளையும் முறையாக பூர்த்தி செய்ய முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.


உயர் கல்வியினை பெற்றுள்ளமாணவர்களின் எண்ணிக்கை 10 வீதமாக காணப்படுகின்றது. இவர்கள் பெரும்பாலும் தமது குடியிருப்பு அமைந்துள்ள பகுதிகளில் இருந்து நகரப்பிரதேசங்களுக்கு சென்றே தம்முடைய உயர்கல்வியை கற்றவர்களாக காணப்படுகின்றார்கள். பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தவர்களாக 03 வீதத்தினர் காணப்படுகின்றார்கள். உயர்தரத்தினை 10 வீதத்திமான மாணவர்கள் கற்றிருந்தாலும் பல்கலைக்கழக அனுமதி என்பது இப்பிரதேசத்தில் மிக குறைவாகும்.

**2. தொழிலாளர்களின் வருமானம்**

ஹயிற்றி தேயிலைத்தோட்ட தொழிலாளர்களின் வருமானம் தொடர்பில் எடுத்து நோக்கும் போது 88வீதமான தொழிலாளர்கள் 10000 ரூபாவிற்கு குறைவான மாதாந்த சம்பளத்தினையே பெறுபவர்களாக காணப்படுகின்றனர் இவர்களில் 31 வீதமான தொழிலாளர்கள் 4000-6000 வரையிலான வருமானத்தினையே பெறுகின்ற தன்மையானது

காணப்படுகின்றது. தொழிலாளர்களுக்கான மாதாந்த சம்பளமாக 730ரூபா வழங்கப்பட்டாலும், (2017ம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம்) இது நிபந்தனையுடன் கூடிய சம்பளமாகவே காணப்படுகின்றது. ஒரு மாதத்திற்கான மொத்த வேலை நாட்களில் 18 நாட்களுக்கு மேல் வேலைக்கு சென்றால் மாத்திரமே இச்சம்பளம் முழுமையாக வழங்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.
‘

**உரு 3**
**தொழிலாளர் வருமானம்**




மூலம் - கள ஆய்வு 2015

அடிப்படை சம்பளம்500, வருகைக்கான கொடுப்பனவு 200,தேயிலை விலைக்கான கொடுப்பனவு 30 ரூபா என சம்பளம் வழங்கப்படுகின்றது. இங்கு காலநிலை மற்றும் தொழிலாளர்களினுடைய உடல்நல பிரச்சினைகள், ஏனைய குடும்ப, சமுதாய நிகழ்வுகளின் காரணமாக 18 நாட்களும் தொடர்ச்சியாக வேலைக்கு செல்ல முடியாத தன்மை காணப்படுவதனால் தொழிலாளர்களுக்கான வருகைக்கான கொடுப்பனவுகள் முறையாக கிடைப்பதில்லை. இதனால் தொழிலாளர்களுக்கான மாத வருமானமானது மிக குறைவாக காணப்படுவதனால்,பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றது. மேலும் தவணை அடிப்படையில் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளும் பொருட்களுக்கான பணம் தொழிலாளர்களினுடைய சம்பளத்தில் இருந்து குறைக்கப்படுவதனால் வருமானம் குறைவாகவே காணப்படுகின்றது. “தோடத்துல வேல செஞ்சாலும் ரெண்டு பேத்துக்கும் சேர்த்து மாசம் ஒரு 5000 - 6000 தான் சம்பளம் இருக்கும் ஏன்னா டிவி, ரேடியோ எல்லாம் கடையில வாங்கியிருக்கம் அதுக்கு காசு மாசம் மாசம் சம்பளத்துலதான் புடிச்சி போகுது. அதுனால சம்பளம் பெருசா இருக்காது”. (விடய ஆய்வு 25)

**அட்டவணை 2**
**சம்பளவிபரப் பட்டியல்**

| வருமானம் | |
|---|---|
| வேலைநாள் சம்பளம் | 9450 |
| மேலதிக நேரவேலை சமபளம் | 3570 |
| கொடுக்கப்படாத சில்லறை | 42 |
| மேலதிக சம்பளம் | 10 |
| மொத்தம் | 13073 |
| **பிடிமானம்** | |
| வங்கிக் கடன் | 3935 |
| தொழிற்சங்கம் | 150 |
| தேயிலை | 02 |
| பெருநாள் முற்பணம் | 500 |
| மரணவரி | 100 |
| முற்பணம் | 2000 |
| சம்பளப்பட்டியல் | 10 |
| நலன்புரி | 350 |
| ஊ.சே.நி | 946 |
| ஏனையவை | 1400 |
| மொத்தம் | 9373 |

பெறப்பட்டசெல்வராஜ் என்பவரின் 12.2015 மாதத்துக்கான சம்பளவிபரப்பட்டியல் தொடர்பிலான விபரத்தினையே மேற்கூறிய அட்டவணை காட்டுகின்றது.இத்தொழிலாளி 21 நாட்கள் வேலை செய்துள்ளார். வேலைநாள் சம்பளமாக21ழூ 450ஸ்ரீ 9450 ரூபாவும், மேலதிகமாக வேலை செய்ததற்காக 3622 ரூபாவுமாக அவருக்ககான மொத்தச் சம்பளம் 13073 ரூபாவாக காணப்படுகின்றது. இச்சம்பளத்தினுடைய மொத்த பிடிமானமாக 9373ரூபா கழிக்கப்பட்டுள்ளது. இவற்றில் அவருடைய சமபளப்பட்டியலுக்காக 10ரூபாவும், தொழிற்சங்கத்துக்காக 150ரூபாவும் குறைக்கப்பட்டுள்ளன.

மேலும் மரணவரி, முற்பணம் என பிடிமானம் காணப்படுகின்றது. எனவே மொத்தச்சம்பளமான 13072 ரூபாவில் 9393 ரூபா பிடிமானமாக குறைக்கப்பட்டு 4550 ரூபா அத்தொழிலாளியின் மாதச்சம்பளமாக காணப்படுகின்றது.5

உறுப்பினர்களினை கொண்டுள்ள அக்குடும்பத்தின் மொத்த வருமானம் 4550ரூபா ஆகும். அவர்களினுடைய

அடிப்படை தேவைகளினை நிறைவு செய்வதற்கும் பொதுமானதாக இவ்வருமானம் காணப்படுவதில்லை. கொழுந்து எடுக்குறதுக்கு சும்மா இருக்கலாம். கெடக்கிற சம்பளத்த வச்சிக்கிட்டு ஒன்னுமே செய்ய முடியாது. 5000ரூபா மாச சம்பளத்தை வச்சிகிட்டு என்னத்த பண்ணுறது? ஒரு மூனு மாசத்துக்கு கொழும்புல வேல செய்யலாம்னு பாத்தா தொறகிட்ட இருந்து லெட்டர் கிடைக்கல. 3பிள்ளைகளையும் வச்சிகிட்டு இங்க வேல செய்யுறதும் குடும்பத்த பாக்குறதும் முடியாத காரியம். (விடய ஆய்வு – 09) மேற்கூறிய விடய ஆய்வு தொழிலாளர்களின் வருமானம் தொடர்பிலான பிரச்சினையினை எடுத்துக்காட்டுவதுடன், தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மேலதிக வருமானத்துக்காக கொழும்பு, கண்டி போன்ற நகரங்களுக்கு வேலைக்கு செல்வதற்கும் பெருந்தோட்ட கம்பனியின் அனுமதியை கேட்டு நிற்கும் தன்மையானது காணப்படுகின்றது. இது தொழிலாளர்களினை பொருளாதார ரீதியாக பாதிக்கும் விடமாகவும் காணப்படுகின்றது.

**3. பாரபட்சமான சட்டங்கள்**

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் காணப்படும் பாரபட்சமான சட்டங்களானவை அவர்களின் குடியிருப்பு சார்ந்து தாக்கத்தினை ஏற்படுத்துவதனைக் காணலாம். ஏனெனில் சட்டரீதியாக ஒரு சமூகம் புறக்கணிக்கப்படும் போது, அச்சமூகம் எத்தகைய மேம்பாடும் அற்றசமூகமாகவே மாறுகின்றது. அவ்வகையில், பெருந்தோட்ட மக்கள் தொடர்பான சில பாரபட்சமான சட்டங்களை பின்வருமாறு நோக்க முடியும்.

4 பிரதேச சபைகளின் நிர்வாக எல்லைக்குள் தோட்டங்கள் உள்வாங்கப்படாமை. 1987ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 15ம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் பிரிவு 2(1) பிரதேச சபையொன்றின், நிர்வாக எல்லைக்குள் கிராமங்கள் உள்ளடக்கப்படவில்லை. 1987ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 33ம் பிரிவானது பெருந்தோட்டங்களை வர்த்தக அல்லது வியாபார நிறுவனங்களாகவே (Private Entity or Business Enterprises) வரையறுத்துள்ளது. இச்சட்டத்தின் படி பெருந்தோட்டங்களின் பணிப்புரியும் மக்கள் பிரதேச சபைகளினுடைய நிர்வாகத்துக்குள் உள்வாங்கப்படாமையினால் பிரதேசசபை தொடர்பிலான சலுகைகள், தொழில்வாய்ப்புகள் போன்றவற்றை அவர்கள் பெறுவதில் இருந்து ஒதுக்கப்படும் நிலைமையானது காணப்படுகின்றது. தோட்டசமூகத்தின் அபிவிருத்திக்கான நிதிப் பிரயோகத்தை தடை செய்தல்.

1987ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டத்தின் பிரிவுகளான 19 (xiv) மற்றும் 19 (xxii) பிரிவுகளானவை பிரதேசசபையொன்றின் நிதியானது முறையே கிராமத்தின் வேலைத் திட்டங்களை கட்டியெழுப்புதல், புதுப்பித்தல், மேம்பாடு செய்தல் மற்றும் பேணுதல் போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும், தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தல்சார் செயற்பாடுகளுக்கே, பயன்படுத்த முடியும். என கூறுகின்றது. எனவே பெருந்தோட்டங்கள் என்பது பிரதேசசபையினுடைய நிதிப் பிரயோகத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். பிரதேச சபையினால் கிராமியமக்களுக்கு வழங்கப்படும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் பெருந்தோட்ட பகுதிகளுக்கு முன்னெடுக்கப்பட இது தடையாக அமைகின்றது.

தோட்ட மக்களிடம் இருந்து வரி மற்றும் கட்டண அறவிடலினை தவிர்த்தல். 1987ம் ஆண்டு 15ம் இலக்கசட்டத்தின் பிரிவு 134(4) பின்வருமாறு கூறுகின்றுத. “கட்டம் ஒன்று அது அமைந்திருக்கின்ற காணியில் பயிர்ச்செய்கையுடன் சம்பந்தப்பட்ட, அல்லது அதன் இடர்நேர்விளையான நோக்கங்களுக்காக அல்லது அந்த காணியின் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவரான எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் வதிவிட நோக்கங்களுக்காக பயன்படுத்துமிடத்தும், அந்த காணிகள் மீது ஏக்கர் வரியொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படுமிடத்து, அந்த காணி கட்டமைந்த இடப் பிரதேசத்துக்குள் அமைந்திருக்கின்றதென்பது சட்டப்படி இருப்பினும் அக்கட்டடத்தின் மீது வரி எதுவும் அறவிட முடியாது” என இச்சட்டம் கூறுகின்றது.

மேற்படி சட்டபிரிவு தோட்டத்துறைக்குள், குடியிருப்பாளர்களால் உருவாக்கப்படும் பௌதீக அமைப்புகள், பொருளாதார நடவடிக்கைகள் மீதான வரி அறவிடல், மற்றும் முறைகேடான அல்லது சட்டரீதியற்ற கட்டட உருவாக்கங்கள் என்பனவற்றின் மீதான தண்டப்பணம் அறவிடல், என்பனவற்றை பிரதேச சபைகள் நடைமுறைப்படுத்துவதை தடைசெய்கின்றது. இதன் விளைவாக பிரதேச சபையொன்றின் நிதி உருவாக்கம் மற்றும் வரவு

செலவு திட்டம் செயன்முறை என்பனவற்றில் பெருந்தோட்ட பிரதேசமும், மக்களும் பங்களிப்பதில்லை, என்ற நியமத்தின் படி பிரதேச சபைகள் தோட்டப்பிரதேசங்களில் மேம்பாட்டை முன்னெடுப்பதில் இருந்து மறுதலிக்கின்றன.

தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூகபொருளாதார பிரச்சினைகளில் குடியிருப்புசார் பிரச்சினைகள் பிரதானமானவையாக காணப்படுகின்றன. குடியிருப்புகள் தொடர்ச்சியான முறையில் அமைந்திருப்பதனால் சுகாதார ரீதியான பிரச்சினைகள், மலசலகூடம் தொடர்பிலான பிரச்சினைகள் போன்றன ஏற்படுகின்றன. மேலும் வடிகாலமைப்பு, குடிநீர், கழிவகற்றல் என்பன அனைத்து குடியிருப்புகளுக்கும் பொதுமைப்பாடான அடிப்படையிலேயே காணப்படுவதனால், சுகாதார மற்றும் சமூக முரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்பாக அமைகின்றது.

தொழிலாளர்களினுடைய பிள்ளைகள் கல்வியினை கற்பதற்கான வாய்ப்புகளும் இப்பிரதேசத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. ஆரம்ப கல்வியினை அல்லது இடைநிலைக்கல்வியினை மாத்திரம் கற்று பாடசாலையில் இருந்து இடைவிலகும் தன்மையானது இப்பகுதிகளில் அதிகமாகும். கல்வியினை கற்பதற்கு ஏற்ற அடிப்படையில் தொழிலாளர்களின் குடியிருப்புகள் காணப்படாமையும் முக்கியமான பிரச்சினையாக காணப்படுகின்றது. மேலும் பெற்றோரிடம் கல்வி தொடர்பிலான விழிப்புணர்வும் குறைவான அடிப்படையிலேயே காணப்படுவதும் குறிப்பிடதக்க விடயமாகும். மருத்துவ வசதிகளினை முறையாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளும் இப்பிரதேசத்தில் குறைவாகும் 7கிராமங்களுக்கும் ஒரு வைத்தியர் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றார் மேலும் அவசர தேவைகளுக்கு நகரப்பகுதியில் காணப்படும் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. மேலும் சட்ட அடிப்படையில் இவர்கள் சுரண்டப்படுவதனையும் காணலாம்.

பொருளாதார அடிப்படையில் குறைவான வருமானம், சுயதொழில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள்குறைவாககாணப்படல்,விவசாயம், கால்நடை வளர்ப்பு ஏனைய சுயதொழில்களினை மேற்கொள்ளவும் தேவையான இடவசதி, பொருளாதார உதவிகள் என்பன குறைவாக காணப்படுகின்றன. சொந்தமாக நிலமின்மை, அரசாங்கத்தின் மூலமாக முறையான உதவிகள் கிடைக்காமை. தொடர்ந்தும் கூலித்தொழில்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைமை காணப்படல், லீசிங் அடிப்படையிலான சுரண்டல்கள் போன்ற பிரச்சினைகளினை எதிர்கொள்ளுகின்றனர்.

தொழிலாளர்களுக்கான நாட்சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டியது அவசியமாகும் இங்கு தொழிற்சங்க அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படாமல் அரசாங்கத்தின் நேரடி தலையீடு அவசியமாகும். மேலும் லயன் அடிப்படையிலான குடியிருப்பு முறைமை நீக்கப்பட்டு தனித்தனியாக அமைக்கப்பட்ட குடியிருப்பு திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் இவை மக்களுக்கு சொந்தமானதாக அமைக்கப்படல் வேண்டும், சட்ட அடிப்படையில் காணப்படுகின்ற வரையறைகள் நீக்கப்பட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சலுகைகள் வழங்கப்படுவது அவசியமாகும். தொழிலாளர்கள் தொடர்ந்து கூலித்தொழில்களிலே தங்கியிருக்கும் நிலைமை மாற்றப்பட்டு அவர்களின் நிலம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு சுயதொழில் வாய்ப்புகளுக்கான மூலதன உதவிகள் வழங்கப்படல் வேண்டும். கல்வி, சுகாதாரம், ஏனைய உட்கட்டமைப்புசார் வசதிகள் முறையாக முன்னெடுக்கப்படல் வேண்டும். இத்தகைய திட்டங்கள் மேலிருந்து கீழான அனுகுமுறைகளுடன் முன்னெடுக்கப்படல் அவசியமாகும். அரசாங்கம், பெருந்தோட்ட கம்பனி, சமூகம், தனியாள் என முன்வைக்கப்படும் போது இத்திட்டங்கள் பரவலான முறையில் அனைத்து தொழிலாளர்களையும் சென்றடையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். இதனடிப்படையில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள முடியும்.

## IV. முடிவுரை

இலங்கைக்கு அதிகமான அந்நிய செலாவணியினை பெற்றுத்தரும் மக்களாக தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள்காணப்படுகின்றனர். எனினும் தொடர்ந்தும் குறைவான வருமானத்தினை பெற்று வாழ்வாதாரத்தினை கொண்டு நடாத்துகின்றனர். பிரித்தானியரினுடைய ஆட்சிக்காலம் தொடக்கம் தேயிலைத் தோட்டங்களில் கூலித்தொழில் செய்பவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். ஹயிற்றி கிராம சேவகர் பிரவில் 1000பேர் வரையில் தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்பவர்கின்றனர். பிரித்தானியரினுடைய

ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட லயன் குடியிருப்புகளிலேயே தொடர்ந்தும் வசிக்கின்றனர். இக்குடியிருப்புகள் அடிப்படை வசதிகள் அற்றவையாகவும், சுகாதார, உட்கட்டமைப்புசார் வசதிகள் அற்றவையாகவும் காணப்படுகின்றன.

தொழிலாளர்களினுடைய பிள்ளைகள் கல்வியினை தொடர்வதற்கான வாய்ப்புகளும் இங்கு குறைவாகவே காணப்படுகின்றது. கல்வி அடிப்படையிலான மேம்பாடு, சமூக மேம்பாட்டின் முதன்மையான விடயமாகும். அரசியலடிப்படையில் காணப்படும் சட்டங்களும் தொழிலாளர்களை தொடர்ந்தும் பாதிப்படைய செய்யும் வகையிலேயே அமைந்துள்ளன. பொருளாதாரரீதியாக குறைவான வருமானம் மற்றும் சுயதொழில் தொடர்பிலான வசதிகள் இன்மையாலும் இத்தொழிலாளர்கள் தொடர்ந்தும் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் நிலைமையே காணப்படுகின்றது. தனியார், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையில் வலுவூட்டல்சார் செயன்முறைகளினை முறையாக முன்னெடுக்கப்படும் போதே தேயிலைத்தோட்ட தொழிலாளர்களின் மேம்பாடு என்பது சாத்தியப்படும்.

**உசாத்துணை நூல்கள்**

1. llyas Ahmad, H. "Estate Tamils Of Sri Lanka a socio economic review''. International Journal Of Sociology and Anthropology, Vol.6(6), pp.184-191, 2014.
2. 2] Sinnathamby.M, Vijesandiran.S "socio – economic and civil status of plantation community in Sri Lanka" Colombo Udayan foundation. 2008.
3. The Plantation Sector. In transition research on the upcountry plantation sector in Sri Lanka The Team Research Department of Sociology university of Peradeniya.2009
4. ரமேஷ்,இரா. விஜேசந்திரன்,எஸ். "இலங்கையின் உள்;ராட்சி அதிகார சபைகளும் பெருந்தோட்ட சமூகமும் ஒரு மனிதவுரிமை நோக்கு". குமரன் பதிப்பகம்.2013.
5. மூக்கையா,செ."மலையக தமிழ் மக்களின் சமூக பொருளாதார நிலை".இன்றைய மலையகம்இ லித்தோகிராபர்ஸ் அச்சகம் சென்னை. pp.25-55,1995.
6. http://www.plantationidustries.gov.lk